ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மைந்நின்ற ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ மைந்நின்ற ‖

உலகைப் பிரளயத்திலிருந்து எம்பெருமான் உய்வித்தமை கூறி உலகிற்கு உபதேசித்தல்

‡மைந் நின்ற கருங்கடல்வாய் உலகின்றி⋆
வானவரும் யாமும் எல்லாம்⋆
நெய்ந் நின்ற சக்கரத்தன் திருவயிற்றில்⋆
நெடுங்காலம் கிடந்ததோரீர்⋆
எந்நன்றி செய்தாரா⋆ ஏதிலோர்
தெய்வத்தை ஏத்துகின்றீர்⋆
செய்ந்நன்றி குன்றேன்மின்⋆ தொண்டர்காள்!
அண்டனையே ஏத்தீர்களே (1)

நில்லாத பெரு வெள்ளம்⋆ நெடு விசும்பின் மீ-
தோடி நிமிர்ந்த காலம்⋆
மல்லாண்ட தடக் கையால்⋆ பகிரண்டம்
அகப்படுத்த காலத்து⋆ அன்-
றெல்லாரும் அறியாரோ⋆ எம்பெருமான்
உண்டுமிழ்ந்த எச்சில் தேவர்⋆
அல்லாதார் தாம் உளரே⋆ அவன் அருளே
உலகாவதறியீர்களே (2)

நெற்றிமேல் கண்ணானும்⋆ நிறை மொழி வாய்
நான்முகனும் நீண்ட நால் வாய்⋆
ஒற்றைக் கை வெண் பகட்டின் ஒருவனையும்⋆
உள்ளிட்ட அமரரோடும்⋆
வெற்றிப் போர்க் கடல் அரையன்⋆ விழுங்காமல்
தான் விழுங்கி உய்யக்கொண்ட⋆
கொற்றப் போர் ஆழியான்⋆ குணம் பரவாச்
சிறு தொண்டர் கொடியவாறே! (3)

www.prapatti.com

பனிப் பரவைத் திரை ததும்பப்⋆ பார் எல்லாம்
நெடுங்கடலே ஆன காலம்⋆
இனிக் களைகண் இவர்க்கில்லை என்று⋆ உலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி⋆
முனித் தலைவன் முழங்கொளி சேர்⋆ திரு வயிற்றில்
வைத்தும்மை உய்யக்கொண்ட⋆
கனிக் களவத் திருவுருவத்தொருவனையே⋆
கழல் தொழுமா கல்லீர்களே (4)

பார் ஆரும் காணாமே⋆ பரவை மா
நெடுங்கடலே ஆன காலம்⋆
ஆரானும் அவனுடைய திருவயிற்றில்⋆
நெடுங்காலம் கிடந்தது⋆ உள்ளத்-
தோராத உணர்விலீர்!⋆ உணருதிரேல்
உலகளந்த உம்பர் கோமான்⋆
பேராளன் பேரான⋆ பேர்கள்
ஆயிரங்களுமே பேசீர்களே (5)

பேய் இருக்கும் நெடு வெள்ளம்⋆ பெரு விசும்பின்
மீதோடிப் பெருகு காலம்⋆
தாய் இருக்கும் வண்ணமே⋆ உம்மைத் தன்
வயிற்றிருத்தி உய்யக்கொண்டான்⋆
போய் இருக்க மற்றிங்கோர்⋆ புதுத்தெய்வம்
கொண்டாடும் தொண்டீர்⋆ பெற்ற
தாய் இருக்க மணை வெந்நீர் ஆட்டுதிரோ⋆
மாட்டாத தகவற்றீரே! (6)

மண்ணாடும் விண்ணாடும்⋆ வானவரும் தானவரும் மற்றும் எல்லாம்⋆
உண்ணாத பெரு வெள்ளம்⋆ உண்ணாமல் தான் விழுங்கி உய்யக்கொண்ட⋆
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்⋆ கழல் சூடி⋆ அவனை உள்ள-
த்தெண்ணாத மானிடத்தை⋆ எண்ணாத போதெல்லாம் இனியவாறே (7)

மறம் கிளர்ந்து கருங்கடல் நீர்⋆ உரம் துரந்து
பரந்தேறி அண்டத்தப்பால்⋆

www.prapatti.com

புறம் கிளர்ந்த காலத்துப்⋆ பொன்னுலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி⋆
அறம் கிளர்ந்த திரு வயிற்றின்⋆ அகம் படியில்
வைத்தும்மை உய்யக்கொண்ட⋆
நிறம் கிளர்ந்த கருஞ்சோதி⋆ நெடுந்தகையை
நினையாதார் நீசர் தாமே (8)

அண்டத்தின் முகடழுந்த⋆ அலை முந்நீர்த்
திரை ததும்ப ஆ! ஆ! என்று⋆
தொண்டர்க்கும் அமரர்க்கும்⋆ முனிவர்க்கும்
தான் அருளி⋆ உலகம் ஏழும்
உண்டொத்த திருவயிற்றின்⋆ அகம் படியில்
வைத்தும்மை உய்யக்கொண்ட⋆
கொண்டற்கை மணி வண்ணன்⋆ தண்
குடந்தை நகர் பாடி ஆடீர்களே (9)

‡தேவரையும் அசுரரையும்⋆ திசைகளையும்
கடல்களையும் மற்றும் முற்றும்⋆
யாவரையும் ஒழியாமே⋆ எம்பெருமான்
உண்டுமிழ்ந்ததறிந்து சொன்ன⋆
கா வளரும் பொழில் மங்கைக்⋆ கலிகன்றி
ஒலிமாலை கற்று வல்லார்⋆
பூ வளரும் திருமகளால் அருள் பெற்றுப்⋆
பொன்னுலகில் பொலிவர் தாமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com